சுற்றுலா, பண்பாடு மற்றும்
அறநிலையங்கள் துறை

# கலை மற்றும் பண்பாடு
# அருங்காட்சியகங்கள்
# தொல்லியல்

## மானியக் கோரிக்கை எண். 29

# அறிவிப்புகள்
# 2014 - 2015

## கே. சி. வீரமணி

பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்

# தொல்லியல் துறை

## அறிவிப்புகள் – 2014–2015

**1. திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் திருஅரங்கநாதர் கோயில் பகுதியில் பண்பாட்டு அகழாய்வு ரூ.5 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்**

2013–2014 ஆம் ஆண்டுக்கான பகுதி II திட்டத்தின் கீழ் திருச்சி மாவட்டத்தில், ஸ்ரீரங்கம் பகுதியில் அகழாய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டது. அகழாய்வில், ஆயிரங்கால் மண்டபத்தில் மண்ணில் புதையுண்டிருந்த அழகிய யானைப் புடைப்பு சிற்பம் மற்றும் மனித உருவங்கள் அடங்கிய சிற்பங்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளது. இதில் ஒரு மனித உருவம் யானைக்கு முன்புறத்தில் நின்ற நிலையில் யானையினுடைய துதிக்கையை பிடித்தவாறும், மற்றொரு மனித உருவம் யானையினுடைய பின்புறத்தை அங்குசம் போன்ற ஆயுதத்தை கொண்டு குத்துவது போன்று அமைந்துள்ளது. இப்புடைப்பு சிற்பங்கள்

அதிஷ்டானப் பகுதியின் ஓர் அங்கமாக காணப்படுகிறது. அகழாய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. கி.பி.13–14ஆம் நூற்றாண்டை சார்ந்த வெளிக்கொணரப்பட்ட நிலைப் பகுதி பாதுகாக்கப்பட்டு வருகிறது. இந்நிலைப் பகுதி ஆயிரம் கால் மண்டபத்தை சார்ந்த பகுதி போல அமைகிறது. திருஅரங்கநாதர் கோயிலில் உள்ள ஆயிரங்கால் மண்டப பகுதியில் காணப்படும் சக்கரத்துடன் கூடிய தேர் பகுதி மற்றும் பண்டைய புடைப்பு சிற்ப தொகுதிகளை முழுவதுமாக வெளிப்படுத்த பண்பாட்டு அகழாய்வு ரூ.5 இலட்சம் செலவில் மேற்கொள்ள **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

2. **அரசினர் கீழ்த்திசை சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்தில் உள்ள சமஸ்கிருத (வடமொழி) ஓலைச்சுவடிகளை கதிர்வரிம்பி (Scanning) செய்து மற்றும் மின்னணு வெளியீடாக (e-publishing) வலைதளத்தில் ஏற்றிட ரூ.50 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்**

இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் பெருமைமிக்க அரசினர் கீழ்த்திசை சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம், சென்னை பல்கலைக்கழக வளாகத்தில் செயல்பட்டு வருகின்றது. இவ்வாராய்ச்சி மையம் 1869ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இந்நூலகத்தில் கணிதம், வானசாஸ்திரம், சித்தா, ஆயுர்வேதம், யுனானி, வேதங்கள், ஆகமம், கட்டடக்கலை, இசை, கவின் கலைகள், வரலாறு மற்றும் பல்வேறு பொருண்மைகள் தமிழ், சமஸ்கிருதம், மராத்தி, உருது, அராபி மற்றும் பாரசீக மொழிகளில் 72,748–க்கும் மேற்பட்ட தாள் மற்றும் ஓலைச் சுவடிகள் மற்றும் 25,373–க்கும் மேற்பட்ட பல அரிய நூல்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

அரசினர் கீழ்த்திசை சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்திலுள்ள சுவடிகளை பொது மக்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் பயனளிக்கும் வகையில் நுண்படம் மூலம் பாதுகாக்க ரூ.2.34 கோடி ஒப்பளிக்கப்பட்டு, இப்பணிகள் எல்காட் நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இந்திரா காந்தி தேசிய கலை மையம், புதுடில்லி மூலம் **49,500** சமஸ்கிருத ஓலைச்சுவடிகள் ஏற்கனவே நுண்படமாக **3,400** சுருள்களாக எடுக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகிறது. தற்போது முதற்கட்டமாக சமஸ்கிருத ஓலைச்சுவடி **1,700** நுண்பட சுருள்களை கதிர்வரிம்பி (Scanning) செய்து மற்றும் மின்னணு வெளியீடாக (e-publishing) வலைதளத்தில் ஏற்றிட ரூ.**50** இலட்சம் செலவில் மேற்கொள்ள **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

# கலை பண்பாட்டுத்துறை

## அறிவிப்புகள் – 2014–2015

**1. அரிய கிராமியக் கலைகளை ஆவணமாக்கிப் பாதுகாக்க ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு அளிக்கப்படும்**

பாரம்பரியமிக்க அரிய கிராமியக் கலைகளான பொம்மலாட்டம், தோற்பாவைக்கூத்து, தெருக்கூத்து, இசை நாடகம் போன்ற கலைகளை முதுபெரும் கிராமியக் கலைஞர்களிடமிருந்து இளைய தலைமுறையினர் அறியும்வண்ணம் ஆவணமாக தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மூலம் ஆவணமாக்கிட ரூ.10,00,000/– (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்ய **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

**2. தமிழ் நாடகங்களுக்குப் புத்துயிர் அளிக்கும் வண்ணம் புதிய வரலாறு மற்றும் புராண நாடகங்கள் தயாரித்து**

**மேடையேற்றம் செய்ய ரூ.7.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு அளிக்கப்படும்.**

தமிழ் நாடகங்களுக்குப் புத்துயிர் அளிக்கும் வண்ணம், தமிழ்ப் பண்பாடு, தமிழ் இலக்கியக் காட்சிகளை மையக் கருத்தாகக் கொண்டு, மாறிவரும் நாகரீகம் மற்றும் சமுதாய சூழ்நிலைகளில் மனித குலத்திற்கு எவ்வகையிலும் ஊறுவிளைவிக்காத பொருண்மை கொண்ட நாடக படைப்புகள் தோற்றுவிப்பது மிகவும் அரிதாகி வருகின்ற சூழ்நிலையில் சிறந்த தமிழ் இலக்கிய காட்சிகளைச் சித்தரித்து நாடகங்களை தோற்றுவித்து இன்றைய இளைய தலைமுறையினருக்கு கொண்டு செல்ல வேண்டியது மிகவும் அவசியமாகின்றது. வளரும் சமுதாயத்தினர் பயனுறவும், நாடகத் துறையை சார்ந்த பல்வேறு கலைஞர்களை ஊக்கப்படுத்தும் நோக்கத்துடனும் இத்திட்டத்தினை தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலம் செயல்படுத்திட நாடகம் ஒன்றுக்கு ரூ.1.50 இலட்சம் வீதம், ஆண்டொன்றுக்கு 5 நாடகங்களுக்கு ரூ.7,50,000/– (ரூபாய் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்ய **மாண்புமிகு**

**தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

**3. தமிழ் இலக்கியத்தில் அரிய மற்றும் சிறந்த காட்சிகளை புதிய நாட்டிய–நாடகங்களாக தயாரித்து மேடையேற்றம் செய்ய ரூ.7.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு அளிக்கப்படும்.**

தமிழ் இலக்கியக் காட்சிகளை மையக் கருத்தாகக் கொண்டு சிறந்த நாட்டிய கலைக்குழுக்களால் புதிய நாட்டிய நாடகங்களை மாறி வரும் நாகரீகம் மற்றும் சமுதாய சூழ்நிலைகளில் சிறந்த கருத்தாழமிக்க மனித குலத்திற்கு எவ்வகையிலும் ஊறுவிளைவிக்காத பொருண்மை கொண்ட படைப்புகள் தோற்றுவிப்பது மிகவும் அரிதாகி வருகின்ற சூழ்நிலையில் சிறந்த தமிழ் இலக்கியக் காட்சிகளைச் சித்தரித்து புதிய நாட்டிய நாடகங்களைத் தோற்றுவிப்பது மிகவும் அவசியமான ஒன்று என்பதாலும், வளரும் சமுதாயத்தினர் பயனுறவும், நாட்டியத் துறையைச் சார்ந்த பல்வேறு கலைஞர்களை ஊக்கப்படுத்தும் நோக்கத்துடனும் இத்திட்டத்தைச் செயற்படுத்தலாம். நாட்டிய நாடகம் ஒன்றுக்கு ரூ.1.50 இலட்சம் வீதம், 5 நாட்டிய–நாடகங்கள் தமிழ்நாடு இயல்

இசை நாடக மன்றத்தின் மூலம் அரங்கேற்றம் செய்திட ரூ.7,50,000/– (ரூபாய் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்ய **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

**4. கிராமியக் கலைஞர்களுக்கு / கலைக் குழுக்களுக்கு இசைக்கருவிகள், ஆடை அணிகலன்கள் வாங்க ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு அளிக்கப்படும்**

தொன்மை சிறப்புமிக்க தமிழகக் கிராமியக் கலைகளை போற்றி வளர்க்கும் கலைஞர்களையும், கலைக்குழுக்களையும் ஊக்குவிக்கும் வகையில், கலைஞர்களுக்கும், கலைக்குழுக்களுக்கும் இசைக்கருவிகள், ஆடை அணிகலன்கள் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலம் ஒரு முறை (one time) வழங்கிட ஏதுவாக, தனிப்பட்ட கலைஞர் ஒவ்வொருவருக்கும் ரூ.2000/– வீதம் 200 கலைஞர்களுக்கும், பதிவு செய்யப்பட்ட கலைக்குழு ஒவ்வொன்றுக்கும் ரூ.6000/– வீதம் 100 கலைக்குழுக்களுக்கும் வழங்கிட, ரூ.10 இலட்சம் நிதி

ஒதுக்கீடு செய்ய **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

**5. தமிழகத்தில் உள்ள பாரம்பரிய கிராமியக் கலைகளையும், இசை நாடகக் கலைகளையும் ஊக்குவிக்கும் வகையில் இளைய தலைமுறையினருக்கு பயிற்சி அளிக்க ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு அளிக்கப்படும்**

கிராமியக் கலைகளை பாதுகாக்கும் நோக்கில், பல்வேறு மாநில அரசுகள் தங்கள் மாநிலத்தின் தொன்மையான கலை வடிவங்களை பாதுகாத்து வருகின்றன.

தமிழக அரசால் அடையாளம் காணப்பட்ட 100 நாட்டுப்புறக் கலைகளில், பல்வேறு கலை வடிவங்கள் அழிந்து வரும் நிலையில், அக்கலைகளை இளைய சமுதாயத்தினருக்கு கொண்டு சென்றால் மட்டுமே பாதுகாக்க முடியும் என்பதால், ஆர்வமுள்ள இளங்கலைஞர்களைத் தெரிவு செய்து, ஒவ்வொரு துறையிலும் உள்ள வல்லுநர்களைக் கொண்டு அழிந்து வரும் நாட்டுப்புறக் கலைகளில் இளைய

சமுதாயத்தினருக்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மூலம் பயிற்சி அளித்திடப்படும்.

இசை நாடகக் கலைகள் தற்போது போதிய ஆதரவின்றி மறைந்து வரும் நிலையில் அரசின் முழு உதவியுடன் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளின் படைப்புகளை, ஆர்வமுள்ள இளம் கலைஞர்களைத் தெரிவு செய்து இசை நாடகத் துறை வல்லுநர்களைக் கொண்டு பயிற்சி அளித்திடவும், தெரிவு செய்யப்படும் கலைஞர்களுக்குத் தேவையான இசைக் கருவிகள், பயிற்சிப் பொருட்கள் வழங்கி தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலம் பயிற்சி அளித்திடப்படும்.

எனவே, மேற்காண் திட்டத்தினை தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலம் செயல்படுத்திட ஒட்டுமொத்தமாக ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

**6. தமிழகத்திலுள்ள மறைந்த கலைஞர்களின் குடும்ப வாரிசுதாரர்களுக்கு குடும்பப் பராமரிப்பு உதவித் தொகை உயர்த்தி வழங்க ரூ.9.26 இலட்சம் நிதி ஒதுக்கீடு அளிக்கப்படும்**

மறைந்த கலைஞர்களின் குடும்ப வாரிசுதாரர்களுக்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலம் குடும்ப பராமரிப்பு உதவித்தொகை ஒரு முறை (One time) தற்போது ரூ.6,000/– வழங்கப்படுகிறது. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலம் ஒருமுறை (One time) வழங்கப்படும் குடும்பப் பராமரிப்பு உதவித்தொகை ரூ.6000/–லிருந்து ரூ.10,000/–ஆக உயர்த்தி வழங்கிட ரூ.9.26 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

# அருங்காட்சியகங்கள் துறை

## அறிவிப்பு – 2014–2015

**மானிடவியல் பரப்பாய்வுத் துறையின்** (Anthropological Survey of India) **கீழ் மொழியியல் பரப்பாய்வுத் துறை** (Linguistic Survey of India) **சார்பில் ஏற்கனவே ஒலிப்பதிவு செய்யப்பட்டிருந்த தற்போது வழக்கொழிந்த நிலையில் உள்ள பழங்குடியினர் மொழிகள் எதிர்கால சந்ததியினருக்கும் கல்வியாளர்களுக்கும் பயன்படும் வகையில் மின்னணு பதிப்பாக இணையதளத்தில்** (e-publishing) **வெளியிட ரூ. 2 இலட்சம் நிதி ஒதுக்கீடு அளிக்கப்படும்.**

மானிடவியல் பரப்பாய்வுத் துறையின் (Anthropological Survey of India) கீழ் மொழியியல் பரப்பாய்வுத் துறை (Linguistic Survey of India) 1918–இல் அனைத்து பழங்குடியினர் மொழிகள் இசைத் தட்டுகளில் பதிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. நிமிடத்திற்கு 78 சுற்றுகள் (RPM) சுற்றும் பழைய இசைத் தட்டுகளை தற்போது இயக்க இயலாது. ஏனெனில் அவற்றை இயக்க வைக்கும் கருவிகள் உற்பத்தி நிறுத்தப்பட்டுவிட்டது. இருந்தும் 1926 ஆம் ஆண்டு

தயாரிக்கப்பட்ட இயக்கும் கருவி மூலம் அவை இயக்கப்பட வைத்து குறுந்தகடு வடிவில் 2002–இல் பதிவு செய்யப்பட்டது. தற்போது இவை மின்னணு பதிப்பு செய்யப்படவுள்ளது. 1850களில் காணப்பட்ட சில கண்ணாடி எதிர்பிம்பங்கள் அல்லது புகைப்படங்கள் போன்றன இயன்றவரை மீட்டுருவாக்கம் செய்யப்பட்டு மின்னணுப் பதிப்பாக வெளியிடப்படும்.

ஆகவே, இந்த அரிய அறிவுப் பூர்வமான தகவல்கள் எதிர்கால நோக்கில் காக்கப்பட வேண்டும். அவை ஒலிப்பதிவு / ஒளிப்பதிவு செய்யப்பட்ட போதிருந்து தொழில்நுட்ப மாற்றங்களின் காரணமாக வழக்கொழிந்து போன நிலையில் இத்தகடுகள் காலவோட்டத்தின் காரணமாக மீட்கப்பட முடியாமலே போய்விடக்கூடும். இவற்றை மின்னணு பதிப்பாக இணையதளத்தில் கல்வியாளர்கள் பயனுக்காக வெளியிடப்படும். இதற்கு ரூ.2 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**